முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1530

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**07.12.2023**, வியாழக்கிழமை

1. பிரம்ம சூட்சும மாதவராஜனே
பிரணவக் குடில் படைத்த குருஅரங்கனே
வரம்தந்து சுப்ரமணியர் யானும் உமக்கு
வழங்குவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 21 ம் நாள், 07.12.2023, வியாழக்கிழமை)
2. ஆசியாக அரங்கமகான் உன் அறைக்குள்ளே
ஆற்றலாக ஞான ஒளியாக நிரம்பியுள்ளேன்
ஆசிதந்து அரங்கன் உன் அகத்துள்ளே
அகண்ட ஜோதியாக நிரம்பியுள்ளேன்
3. வாசிவென்ற காலம் தொட்டு உன்னுள்ளே
வஜ்ரமாக வல்லமையாக முருகன் யான் ஆசிதந்து நீக்கமற
இணைந்துள்ளேன்
அன்னதனால் அரங்கன் சொல்செயல் சிந்தை அனைத்தும்
ஆறுமுகன் என் ஆக்கமாகுமப்பா
4. அப்பனே அரங்கன் கரம்பட
அகிலத்தில் ஞானம் பயிலுகின்ற மக்கட்கெல்லாம்
வரமாக யான் இறங்கி வருங்காலத்தில்
அன்னவர்களுக்கும் வாசிவசமுண்டாக்கி
5. ஆக்கியே அன்பர்கள் அனைவருமே
அரங்கன் தேடும் ஞானிகளாக
இந்த அகிலத்திதை மாற்றம் நிகழ்த்துகின்ற வண்ணம்
மாற்றும் மகா சக்திகளாக
6. ஆறுமுகன் யான் வழி நடத்தி அருளுவேன்
அருளவே அரங்கனின் தர்மமும் ஞானமும்
அளவில்லா மகா சக்தி நிறைந்தது
மிகைபட உலகோர் முன்னின்று ஏற்று

7. முன்மொழிந்து உலகமெல்லாம் தர்மசாலைகளை
இன்பமுற நிரப்பி இவ்வுலகில் எக்காலமும்
பசிபிணி துன்பம் இல்லா வண்ணம்
இயல்பாக எளியோர்க்கும் நன்மை கிட்டும் வண்ணம்

8. வகையாக அரங்கன் ஞான தர்மவழிகளை
வழிநடத்தி நின்றால் போதும்
வையகம் சடுதி ஞான உலகமாகவும் தயவுமிக்க ஞானவான்கள் ஆளுகின்ற
தர்ம ஞான தலைமையாகவும் மாறி அற்புதம் நிகழும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–